
லயன்
காமிக்ஸ்
எரியில்
ஒரு எரிமலை!
ரூ. 3.50
முழு நீள த்ரில்லர்!


மின்னல் படையினர் தோன்றும்
ராக்கெட் ரகசியம்!
லயன்
காமிக்ஸ்
அடுத்த வெளியீடு!
புயல்வேக சாகஸக் கதை!
ரூ. 3.50




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும்
வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ்.
தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.
வெளியீடு எண் : 90


'உளவறிதல்' - நாட்டுக்கு நாடு.. நாட்டுக்குள்ளேயே - என்று புவி எங்கும் வியாபித்து நிற்கும் ஒரு புதிரான கட்டமைப்பு.
WORLD INTE SE
..வெற்றி களுக்கு 'பரணி' இல்லை..
ஓ... கிடைத்து விட்டது - டாக்டர் டாட் பற்றிய தகவல்!
ஐந்தாம் படையினர் ஊடுருவாத இடம்தான் எது?
உளவுத் துறையும் விதி விலக்கில்லை!
நைட் போர்ட்? டாக்டர் டாட் கிடைத்து விட்டார்.
DR. TOTT VIZ
CONFIRMED
CONFIRMED
மிஸ்டர் 'எல்'... டாக்டர் டாட் பற்றி விபரம் கிடைத்து விட்டது.
தீய சக்திகள் செயல்படும் வேகமே அலாதிதான்.
ரிங் ரிங்
யார் நீ?


க்ராஷ் !
எம தூதன்!
ஓ... இத்தனை வருடங்களுக் குப் பிறகு நீ என்னை கண்டு பிடித்து வந்து விட்டாயா?
உன்னை எப்படி மறக்க முடியும்? எங்களுக்குத் தேவை என்ன என்று உனக்கே தெரியும்!
ஈனத்தனம் என்று தெரிய வந்ததும் ஓடி ஒளிந்து கொண்டேன். என்னிடமிருந்து நீ எதையும் தெரிந்து கொள்ள முடியாது.
பேச வைக்க உத்தரவாத மான பழைய, புதிய யுக்திகள் எத்தனையோ இருக்கின்றன.. டாக்டர்!
எப்படியும் கறந்து விடுவோம்... நீங்களாகவே சொல்லி விடுவதுதான் உங்களுக்கு நல்லது!
நான் சொன்னாலும் என்னை விட்டு வைக்கவா போகிறீர்கள்? உன்னால் ஆனதை பார்த்துக் கொள்!
உள்ளே எரிமலை குமுறிக் கொண்டிருந்தது.. ஆனால் வெளியே - பிசிறில்லாத அமைதி..
சொல்லித் தொலை - கிழட்டுப் பிசாசே -
அடி..! என் பாவம் கொஞ்சமாவது குறையட்டும்!


மயிலே... மயிலே இறகு போடு என்றால் போடுமா...? நீ இப்படி சித்திர வதைப்பட வேண்டுமா..?
✱ ஆ..! அடேய் கிராதகா. ✱ அ..ம்மா ✱ உன்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள... ✱ ஐயோ... வழி... எனக்கு -
என்னிட மிருந்து தப்பிப்பதா.. கனவு காணாதே! ஏய்ய்.. நீ -
முட்டாள்.. சயனைட் குப்பி - பல்லுக் கிடையில்... இப்படி அழுத்தமாக ஒரு கடி - முடிந்தது.
சண்டாளப் பாவி....
...கெடுத்தானே - காரியத்தை!
சரி - தொலைகிறான்!
அது இங்குதான் இருக்கும் - தேடி எடுத்து விடலாம்!
இங்கே... அல்லது இங்கே... ஒருவேளை இங் -?
டிங்
டக்
டக் டக்


போலீஸாக இருக்குமோ?
நான் அகப்பட்டுக் கொண்டு விடலாகாது...
ஓடிப் போய் விடுவதுதான் விவேகம்.
வீடுக்குள்ளே -
ச்சொ... ச்சொ... பாவம்!
அதிர்ஷ்டம் கெட்ட மனிதர்.. நான் வந்து சேருவதற்குள் அவருடைய பழைய எதிரிகள் முந்திக் கொண்டு விட்டமாதிரி தோன்றுகிறது!
ஹலோ..? ஹலோ..?
உளவுத் துறையா?
உளவுத்துறை அலுவலகத்தில்
அந்த பைலை உனக்காகத் தான் அங்கே வைத்தேன் காரிகன்..
ம்ம்... வயதான டாக்டர் - மிருகத்தனமாக கொலை செய்யப் பட்டிருக்கிறார்... அவருடைய இருப்பிடத்தில்!
இதில் நமக்கு என்ன வேலை...!
போலீஸாரின் விவகாரம் அல்லவா இது?
மேலோட்டமாக அப்படித் தான் தோன்றும் ... ஆனால் இது சர்வதேச விவகாரம்...
டாட்டின் நிஜப் பெயர் டாக்டர் கிரிஸ்....
இரண்டாம் உலகப் போரின் போது ஆயுளை நீடிக்கும் ஆராய்ச்சி செய்து வந்தவர்...
சில கடுமையான குற்றங்களுக்காக தேடப்பட்டு வரும் நபர்.



பிரமிப்பூட்டும் அரியதோர் கண்டு பிடிப்பு அவர் வசம் இருப்பதாக தெரிய வந்தது... யுத்தம் முடிந்ததும், ஒவ்வொரு நாடும், அவரை சொந்த'மாக்கிக் கொள்ள போட்டியிட்டது அந்த முயற்சியில் நம் அரசுக்குத்தான் வெற்றி என்று தோன்றியது.
டாக்டர் டாட்டுக்கு இரண்டு மில்லியன் டாலர் பணம் தரப்பட்டது! புதிய பாஸ்போர்ட் ஏற்பாடு செய்யப்பட்டது! ஆசாமியை பாதுகாப்பாக அழைத்துவர அதிரடிப்படை லெப்டினென்ட் டான் பிராண்ட் அனுப்பப்பட்டார்.
ஆனால் இரண்டு பேருமே மாயமாய் மறைந்து விட்டார்கள்!
துணைக்கு அவர்களை இரகசியமாக பின் தொடர்ந்த குழுவினர் கேட்ட செய்தி- இதுதான்!
ஆபத்து... ஆபத்து.. எதிரிகள் விமானத்தை தாக்குகிறார்கள்.
கீழே தென்பட்ட ஒரே ஒரு சா லையும் ஆழமான ஓர் ஏரிவரை சென்று முடிவுறக் கண்டனர் - பின் தொடர்ந்து சென்ற பாதுகாப்பு குழுவினர்- தீவிரமாக தேடியும் அங்கே வாகனமோ, பணமோ, ஆட்களோ தென்படவில்லை.
வேறொரிடத்தில் -
அந்த கிழம் இப்போதும் பல்லிடுக்கில் சயனைட் குப்பியோடு இருப்பார் என்று நான் எதிர் பார்க்க வில்லை பாஸ்..
தொலை யட்டும்... விடு..! நமக்கு தேவையானது கிடைத்ததா இல்லையா?




உள்நாட்டு விவகாரங்களைக் கவனிப்பது F.B.I. உளவுப்பிரிவின் வேலை. அதே சமயம் வெளி நாட்டு விஷயங்களைத் துப்புத்துலக்குவது C.I.A. (சென்ட்ரல் இன்டலிஜென்ஸ் ஏஜென்ஸி). இங்கே காரிகன் 'ஏஜென்ஸி' என்று குறிப்பிடுவது C.I.A. நிறுவனத்தைத்தான். - ஆசிரியர்.


இதென்ன கேலிக் கூத்து..!
காலம் வேகமாக மாறி வருகிறது காரிகன்! மேலிடத்து உத்தரவு அப்படி! ஏஜென்ஸியின் பிரதிநிதி ஏற்கனவே வந்தாயிற்று!
அதோ - ஜெனிவர் பிராண்ட்!
என்ன யோசனை... காரிகன்?
இந்தப் பெயர்-
ஆமாம்... யுத்த முடிவில் டாக்டர் டாட்டை அழைத்து வரச் சென்ற லெப்டினெண்ட் டான் பிராண்ட் - என் சித்தப்பா...!
டாக்டர் டாட்டை கொன்று விட்டு இரண்டு மில்லியன் டாலர்களை தனக்கே சொந்தமாக்கிக் கொண்டு எங்கோ மாயமாக மறைந்து விட்டார் என்று என் சித்தப்பா மீது குற்றம் சாட்டப்பட்டது.
ஆனால் நாம் இப்போது கேள்விப் பட்டது- வேறு மாதிரி!
டாட்டின் மரணம் இந்த வழக்கில் ஒரு புதிரான திருப்பம்... சித்தப்பா நிரபராதி என்று நிரூபிக்காமல் நான் ஓயமாட்டேன்.



சொந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பதல்ல நம் பணியின் நோக்கம்..
தெரியும் மிஸ்டர்... நீங்கள் சொல்லித்தான் நான் அதை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை!
உங்களை மாதிரி சமர்த் தர்கள் பெண் களோடு
இணைந்து செய லாற்ற விரும்பாம லிருக்கலாம்.
சேச்சே... அப்படி யெல்லாம் ஏதுமில்லை!
நானும் ஒரு தொழில் முறை உளவாளிதான் - ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்!
சரி...போதும்- நமக்குள் சண்டை வேண்டாம்!
ஆல்ரைட்... இது உங்களுடைய எல்லை. நீங்களே சொல்லுங்கள் - முதலில் எங்கே ஆரம்பிக்கிறோம்?
குற்றவியல் ஆய்வு கூடத்தில்...!
நாம் கேள்வியை தொடுக்கு முன் பதிலோடு வந்து நிற்கும் மாமேதைகள் நிறைந்த இடம்!
சற்றைக்கெல்லாம் -
காரிகன் இது டாக்டர் டாட்டின் வீட்டில் கிடந்த ஒரு பிரீப் கேஸை சோதனை போட்ட போது கிடைத்தது. தோலினுள் புதைக்கப் பட்டிருந்தது.
?
என்ன பொருள் - இது?



காரிகனுக்கு தெரிந்து இருக்கலாம்!
சாவி..!- இல்லையா?
சாவியா...? ஹாஹ்..ஹா... சரியான கோமாளியாக இருக்கிறீர்களே!
இது எப்படி இயங்கும் - காரிகன்?
இது ஒரு 'ஸோனிக்' சாவி! இதற்குரிய பூட்டில் வைத்து அழுத்தினால்...
டக்
கிளிக்
..போதும் ..போதும் - ஆனால் இதற் குரிய பூட்டை எங்கே என்று தேடுவது?
இந்தச் சாவியை வைத்து நம் ஆராய்ச்சியை தொடருவோம்.
எப்படி...? இதில் 'ட்ரேட் மார்க்' முத்திரை கூட இல்லையே!
எங்கே விசா ரிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்



விசேஷ ரகப் பூட்டுகள் செய்யும் ஒரு கடைக்கு விரைந்தனர்.
உளவுத் துறை மேலிடம் உங்கள் கூற்றை ஆமோதிக்கிறார்கள்... ஓ.கே. உங்கள் வினாவுக்கு விடை - இதோ...! பாங்க் லாக்கரின் சாவி இது!
டாக்டர் டாட்டின் பாங்க்குக்கு இருவரும் சென்றார்கள்..
டாக்டர் டாட்டின் - லாக்கரா...?
நோ.. அதெப்படி? சட்டம் இடம் தராதே!
என்ன? உளவுத் துறை விசாரணையா? ஓ.கே. வாருங்கள் என்னோடு.
டக்
த்ட்
கிளிக்
வாவ்...! காரிகன்...! இதெல்லாம் தங்கம்தானா?
ஆமாம்! தங்கம் என்றுதான் நினைக்கிறேன் - ஆனால் இது தங்கத்தை விட விலைமதிப்பற்றது!
என் சித்தப்பா மீதுள்ள பழியை துடைக்க உதவும் தடயம்!
ஆனால் - இரண்டு மில்லியன் டாலர்கள் கரன்ஸியாக அல்லவா கொடுக்கப்பட்டது.


அவர் திருடினார் என்கிறீர்களா?
அந்த பழைய விவகாரத்தை விடு...! ஒரு மர்மக் கொலை பற்றி துப்பறிய வந்திருக்கிறோம் நாம் - நினைவிருக் கட்டும்!
தலைமைய கத்தில்- புல்லுருவி மீண்டும் செயல் பட்டான்..
ஹலோ... நைட் போர்ட்? டாட் கொலை பற்றி ஆராய இரண்டு ஏஜண்டுகள் கிளம்பி யிருக்கிறார்கள் - காரிகன்... ஜெனிவர் பிராண்ட்... அவர்கள் இப்போது...
என் சித்தப்பா நிரபராதி என்று நிரூபிக்க இதை நான் எடுத்துப் போகிறேன்.
தங்கத்தை தொடாதே - வரி விவகாரம் இது.
இந்த டயரியை நாம்..
அதை கொடுங்கள் என்னிடம்...
ஏய்.... பிடுங்காதே!
அதே சமயம் - சாலையில்
என்னை இங்கே இறக்கிவிட்டு, காத்திரு க்ரப்!


அந்த டயரி என் பாஸிடம் போய்ச் சேர வேண்டும்.
சரி...! நான் சேர்ப்பித்து விடுகிறேன்!
இது என்னுடைய எல்லை... - எனக்குத்தான் அதிகாரம்... அதைக் கொடு!
உங்கள் கையில் இது பத்திரமாக இராதோ என்றொரு சந்தேகம் எனக்கு!
ஆ...
என்ன சேஷ்டை இது பிராண்ட்?
தலைமையகத்திற்கு டயரி பத்திரமாக போய்ச் சேர இது அவசியம் என்று தோன்றியது!


இதை பாதுகாக் கும் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள்.
அவர்களிடம் சிக்கியது எதுவானாலும் அது எனக்கு வேண்டும்.
கேஸை உன் பொறுப் பில் எடுத்துக் கொண்டு விட்டாயா?
எதிரி...
அவள் கையில் ஒரு பெட்டி... இல்லை - ஒரு புத்தகம்...
அடடே... டாட்டின் டயரியோ?
காரில் ஏற அவர்கள் பிரியும் போது நான் பாய வேண்டும்.
ஆங் - இதோ.


பிராண்ட்! ஜாக்கிரதை!
காரிகன்... உள்ளே ஏறி இந்த கதவை திறந்து விடுங்களேன்.
ஏய்ய்..!
யார் நீ..?
சே..!
காரிகன் எதிரியை துரத்திக் கொண்டு ஓடினார்.
சீஸர் எதையோ பறித்துக் கொண்டு ஓடி வருகிறான்.


சீஸர்... ஏறு - சீக்கிரம்.
ஆவ்... புத்தகம் - நழுவி விட்டதே... என் கையிலிருந்து!
ஆ
ஹூம்... கெடுத்தீர்களே காரியத்தை!
கெடுத்தேனா? யார் - நானா? ஏட்டை திருப்பு கிறாயா?
ஆ


உங்கள் பாஸிடம் இதை சொல்லப் போகிறீர்களா காரிகன்.?
இல்லை... உன்னை இம்முறை காட்டிக் கொடுக்க மாட்டேன்! அகப்படுவதை பொறுக்கி எடுத்து ஆய்வு கூடத்துக்கு கொண்டு போவோம் - வா!
டாட்டின் டயரியை அரைத்து கூழாக்கி விட்டது நம் காரின் சக்கரம்!
சிரிக்காதேடா முட்டாள்... அந்த குப்பையை கிளறியே நம் தலைக்கு வேட்டு வைத்து விடுவான்கள் அந்த எமன்கள்!
திடீரென்று பாய்ந்தார் களாம்... பிடுங்கினார் களாம்.. - சே..! இப்படி கோட்டை விட்டு விட்டு வந்து நிற்கிறாயே!
கழுதை தின்று துப்பியது போல் டயரியை கொண்டு வந்து சேர்த்திருக்கிறாயே - வெட்கமாயில்லை..
?
மௌனமாக இருக்கச் சொல்லி சைகை செய்து விட்டு -



'படக்' கென்று கதவைத் திறந்தார் காரிகன். வெளியே நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த வன் வந்து விழுந்தான்!
ஒட்டுக் கேட்டானு...? நீ எப்படி-
கணிப்பது சுலபம்... சீஃப்! வேறெப்படி நாங்கள் யார், எங்கே எதற்காக போனோம் என்று எதிரிகள் தெரிந்து கொண்டிருக்க முடியும்?
இந்த குப்பை யால் இனி என்ன பிரயோஜனம்- சொல்
'லாப்'பில் கொடுத்து -
கால விரயம் - காரியத்தை கெடுத்து விடலாமில்லையா? ஏஜென்ஸியிலிருந்து வந்திருக்கும் பிராண்ட் நம்மைப் பற்றி அங்கே என்ன சொல்வாள் என்று எண்ணிப்பார்!
போனால் போகட்டும் சார்! இந்த ஒரு தடவை காரிகனை மன்னித்து விடுங்கள்!
அங்கே எதிரி களின் முகாமில்-
டயரியை நாசம் பண்ணி விட்டு வந்து நிற்கும் உதவாக்கரைகள்..! இனி உளவுத் துறையினரின் ஆய்வு கூடம் அந்த குப்பையை கிளறி விபரங்களை கண்டறிந்து டாட்டின் இரகசிய பாசறைக்கு நமக்கு வழிகாட்டி னால்தான் உண்டு!



உளவுத் துறையினர் ஏதாவது தெரிந்து கொண்டால் நம் ஆசாமி தகவல் கொடுப்பான். அவர்களை முன்னால் விட்டு நாம் பின்னால் செல்வோம்!
இதைக் கொண்டு போய் 'லாப்' பில் கொடு மிஸ் பிராண்ட்...
TOTT
சரி... ஸார்!
அந்த 'ஐந்தாம்படை' ஆசாமிக்கு டாட்டை கொன்றது யாரென்று தெரிந்திருக்கலாம் - அவனை விசாரிக்க வேண்டும்!
அவன் எதிரணியை சேர்ந்தவனாக இருக்கக் கூடும்- வாயைத் திறப்பது சந்தேகம் தான்!
என்ன... இது?
ஒரு முறை போனில் பேச சட்ட பூர்வமாக இவனுக்கு உரிமையுண்டு ஸார்..!
நம் கையாளின் முகமூடி கிழிந்து விட்டது - காரிகன் லேசுப் பட்ட ஆளில்லை.
அப்படிப்பட்டவனை நாம் முறியடித்தால் இரட்டை சந்தோஷம் கிடைக்கும் இல்லையா?


'லாப்'பிலிருந்து ஏதாவது தகவல் உண்டா.... மிஸ் பிராண்ட்.
ரஸ் போனில் பேசுவார் ஸார் - நண்பர் நீங்கள் என்னை 'ஜெனிவர்' என்றே அழைக்கலாம்!
ஜெனிவர்.. ஓ... வெரி நைஸ்!
அது - நண்பர் களுக்குத்தான் -உங்களுக் கில்லை!
ரிங் ரிங்
ரஸ் பேசுகிறேன்.... காரிகன்! எங்களால் சாதிக்க முடிந்தது என்ன என்று வந்து பார் - உன் கூட்டாளி அந்த மாய மோகினியையும் அழைத்து வா.
உனக்கு மச்சம் இருக்குடா - ராஸ்கல்!
இது இப்படி ஆனது எவ்வாறு?
சில முரடர்கள் அபரிக்க பார்த்தார்கள்... காரிகன் தட்டி விட்டார்... கார் சக்கரத்தின் கீழ் மாட்டிக்கொண்டது..
விபத்துப் போல நடந்துவிட்டது. அகப்பட்டதை அள்ளிக் கொண்டு வந்தோம்...
ம்ம்.. எங்களால் சேகரிக்க முடிந்த தகவலை பார்ப்போமா-
டாட்டின் இலட்சியம் ஆயுளை நீடிக்கும் ஆராய்ச்சி! பல விபரங்கள் சிதைந்து போய்விட்டன..
''டாட்டின் பாசறை'' என்றோர் இடம் - அவருடைய 'லாப்'போ?
டாட்டும், லெப்டி னெண்ட் பிராண்டும் கடைசியாக மறைந்து போன இடத்தையே மையமாகக் கொண்டி ருக்கின்றன இந்த விபரங்கள்.



டாட்டின் கொலை பற்றி நாங்கள் இங்கே விசாரிக் கிறோம் ஜெனிவர்.. டாட்டின் பாசறை உங்கள் பகுதியில் இருப்பதால் இந்த வழக்கு உன் பொறுப்பில் விடப்படுகிறது!
வரவேற் கிறேன்.. ஸார்!
சீஃப்... வந்து நான் -
ஒரு பெண்ணின் கீழ் பணி புரிய இஷ்டமில்லை- அப்படித்தானே?
இல்லை.. வந்து - ஆல்ரைட்.. ஸார்!
அது அப்படித் தான் - காரிகன்!
சித்தப்பா மாயமாக மறைந்த பகுதி கோபல் ஸ்ட்ரான்.
குறைந்த அவகாசம் - பரவா யில்லை...?
விமான டிக்கட்டு களுக்கு ஏற்பாடு செய்து விட்டேன்... புறப்பட நீங்கள் தயார் தானே?
செய்தி அவர் களை முந்திக் கொண்டு பறந்தது..
கோபல்ஸ்ட்ரான் போகிறார்கள் என்று தாமதமாக தகவல் கிடைத்தது. கூடவே செல்ல முடியவில்லை.
பரவாயில்லை.. அங்கே பெர்ரட் இருக்கிறான்... திறமைசாலி - இவர் களை கவனித்துக் கொள்வான்.


அமெரிக்காவா...? ம்ம்... டாட்டின் பாசறையை அவர்கள் கண்டு பிடித்ததும் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமா...
ஓ.. செய்து விடுகிறேனே!
அங்கே 'வர வேற்பு குழு' காத்திருப்பது இவர்களுக்கு தெரியாது.
டூரிஸ்டுகளாக நாம் போகிறோம்... எங்கள் ஏஜென்ஸி - அறைகள், ஒரு கார், நாம் தொடர்பு கொள்ள வேண்டிய விதம் எல்லாவற்றையும் முன்னேற்பாடாக செய்திருக்கிறார்கள் காரிகன்...
பிறருக்கு இது சந்தே கத்தை ஏற்படுத்தா தா? டூரிஸ்டுகள் அங்கே போய்த்தான் எல்லா ஏற் பாடுகளையும் செய்து கொள்வார்கள்...
நீங்கள் சரியான தொடை நடுங்கி காரிகன்!
நாம் இங்கே வந்திருப்பது யாருக்கே தெரியாது!
சரியான கோமாளிகள். பார்த்த மாத்திரத் திலேயே அமெரிக்க உளவாளிகள் என்பது தெரிகிறது!
ப்ராண்ட்....? காரிகன்..? கார் ரெடி.... -
நீங்கள் - டௌபெட்! அப்படித் தானே!
பொறு - தான் யாரென்று அவனே நிரூபிக் கட்டும்!


ஓ... அது சரிதான்...
அடையாள சங்கேத வார்த்தை... அது வந்து -
வேண்டாமே விளையாட்டு... கார் சாவியை கொடுத்து விட்டு எங்கேயாவது கண் காணாமல் போ!
நம்மை நீயே காட்டிக் கொடுத்து. விடுவாய் போலிருக் கிறது.
வீணாக அலட்டிக் கொள்ளா தீர்கள்.. நானொன்றும் கற்றுக் குட்டி இல்லை.
முதலில் நாம் லாட்ஜுக்கு போகிறோம். லேப்பின் மேப்பை மறுபடியும் ஆராய் கிறோம். பிறகு போய் டாட்டும்,
சித்தப்பாவும் விமானத்தோடு விழுந்த ஏரியை சுற்றி வந்து நோட்டம் விடுகிறோம்... எப்படி எங்கே என்று உள்ளூர் கி ழடுகளை விசாரித்தால் தெரிய வரலாம்.
நீ நினைக்கிற மாதிரி இல்லை. இது அத்தனை சுலபமான பணி அல்ல!
அப்படித்தான்! - நீங்கள் மட்டும் குறுக்கே புகுந்து குளறுபடி பண்ணா விட்டால்!
அப்படி ஒரு எண்ணம் எனக்கில்லை! ஆனால் - பின்னால் பாரேன்... எவனோ நம்மை பின் தொடர்ந்து வருகிறான்!


யோசிக்காமல் பிரேக்கிட்டு காரை நிறுத் தினாள் ஜெனிவர்.
எதிரி சுதாரித்துக் கொண்டான்.
என்னை தெரிந்து கொண்டுவிட்டார்கள்! உடோவுக்கு போன் செய்து, அவனுடைய ஹோட்டலை இவர்கள் கடந்து செல்லும் போது பின் தொடருமாறு சொல்லி விடலாம்!
வந்து சேர்ந்து விட்டோம் பத்திரமாக - வழியில் யாரும் நம் மீது பாய்ந்து தாக்க வில்லை பார்த்தீர்களா?
உடோவின் ஹோட்டலில் தான் அவர்கள் தங்கினார்கள்.
ஏரி... இங்கேதான் இருக்கிறது! ராட்சஸ ஜந்துக்கள் அதில் வாழ்ந்து வருவதாக வதந்தி!
பழைய,,பெரிய ஏரி எதுவானா லும் இப்படி ஒரு வதந்தி இருக்கத் தான் செய்யும்!
அக்கம் பக்கத்தில் உள்ள கிராமத்து மூதியவர் களுக்கு எப்போதோ நடந்த அந்த சம்பவம் நினைவிருக்கலாம்!
அவர்களை தேடிக் கண்டு பிடிப்பது கஷ்டம்! இன்னமும் அதை ஞாபகம் வைத்திருப்பார்களா ? - வைத்திருந்தாலும் நம்மிடம் வெளியிடுவார்களா - சந்தேகம் தான். தலையை சுற்றி மூக்கை தொடுகிற முயற்சி... சரியாக படவில்லை எனக்கு..
உங்களை யார் இங்கே யோசனை கேட்டார்கள்...? நான் சொல்வதை நீங்கள் செய்தால் போதும்!


நான் உன் சகா... என் யோசனையை புறக் கணிக்காதே
உங்கள் ஊரில் வேண்டுமானால் தீர்மானிக்கும் உரிமை உங்களுக்கு இருக்கலாம். இது என்னுடைய பிரதேசம். இங்கே நான் வைத்தது தான் சட்டம்!
டாட்டை கொன்ற வர்கள் அவருடைய இரகசிய பாசறையில் இருப்பதை கவரத் துடிக் கிறார்கள்... நீ அங்கே இங்கே விசாரித்துக் கொண்டு அலைந்தால் அவர்கள் முந்திக் கொண்டுவிடுவார்கள். நம்மையும் தீர்த்துக் கட்டி விடுவார்கள்.. முட்டாள் பெண்ணே!
முட்டாள் என்று இன்னொரு முறை என்னை சொன்னால் அப்புறம் நான் பொல்லாதவளாகி விடுவேன் - ஜாக்கிரதை.
வெளியே - பொர்ரட் வந்து சேர்ந்தான்.
காரிகனும், ஜெனிவரும் அங்கே தங்கியிருப்பது தெரிய வந்ததும் உற்சாக மடைந்தான்..
ஹலோ பொர்ரட் ...?
உன்னிடமுள்ள 'மாஸ்டர் கீ'யை தரப் போகிறாயா இல்லையா?


பெட்டி, படுக்கைகளை அப்புறமாக பிரிக்கலாம்.. எனக்கு பசிக்கிறது.
இங்கேயே ஏதா வது கிடைக்கும் - வா.. கீழே போகலாம்.
ஸாரி.. சமையல் அறையில் பிரச்னை...! ஆனால் - நான்கு கிலோ மீட்டர் தூரம்தான்... அருமையான உணவு கிடைக்கும்.
நன்றி.
பெர்ரட் அவர்களுடைய அறையினுள் புகுந்தான்.
மேப், குறிப்புகள், கடிதங்கள்,
டயரி- ஏதா வது அகப்படு கிறதா பார்!
அடக் கடவுளே... கார் சாவியை மேலேயே விட்டு வந்து விட்டேன்...
ஒரு நிமிஷம்..! இதோ ஓடிப் போய் எடுத்து வந்து விடுகிறேன்!
போச்சு!



ஹே..! புதிதாக 'பைக்'கின் தடம்! விடாமல் துரத்தி வந்திருப்பானோ!
போய் விசாரிக்
ஏ.ஏ.ஏ....
?
இதோ வந்து விட்டேன் பிராண்ட்!
படீர்!
அவன்தான் திருட்டுக் கும்பலின் தலைவன் சுடுங்கள்.
படீ!
எப்படி முடியும்? துப்பாக்கி ஸூட் கேஸினுள் மாட்டிக் கொண்டு விட்டதே!


நீங்கள்லாம் ஒரு உளவாளி-தூ..!
நாம் டூரிஸ்டுகள் என்பது மறந்து விட்டதா? இது ஒரு சாதாரண திருட்டு...! இதற்கு துப்பாக்கியை பிரயோகித்தால் வம்பாகிவிடும்!
இதுதான் நீ ஹோட்டல் நடத்துகிற இலட்சணமா?
வேளை ஸார்.. எனக்கு போறாத வேளை ஸார் - வேறென்ன ?
அந்த அப்பாவியை ஏன் மிரட்டுகிறீர்கள்.. யாரோ உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தால் அவன் என்ன செய்வான்?
உடைத்துக் கொண்டு..? - சரிதான்.
போலீஸுக்கு சொல்ல வேண்டிய தில்லை உடோ... எதுவும் திருட்டுப் போகவில்லை.
சரி.. மேடம்
ம்ம்.. உடோ... மாஸ்டர் கீ உன் வசம் இருக்கிற தல்லவா?
ஓ இருக் கிறதே...! எதற்கு...? உங்கள் வசம் சாவி இருக்கிறதே!
காட்டு - பார்ப்போம்!
காரிகன்... என்ன விளை யாட்டு...
...சிறு பிள்ளைத் தனமாக...
வாயை மூடு.. ஜெனிவர்.
ம்ம்... மாஸ்டர் கீயை எடு!


பைக்கில் வந்த திருடனிடம் கொடுத்து விட்டாய் - இல்லையா?
இல்லை... நான்.. ஆவ்.. ஆமாம்.. என்னை மிரட்டினான்.. அச்சுறுத் தினான்...
விடுங்கள் அவனை....
..இன்னொரு முறை வாயை மூடு என்று சொன்னீர்கள் என்றால் எலும்பை நொறுக்கி விடுவேன்..
ஹே.. பிராண்டட.. விடு.. விடு... கையை - ஆவ்வ்...
பிசாசு... பிசாசு..
என்ன நீ - இப் படி பண்ணி விட்டாயே
உங்களுடைய திமிருக்கு கிடைத்த பரிசு... இந்த அப்பா வியை ஏன் வதைத்தீர்கள்?
ஆமாம்.... எப்படி நீ என் மீது கை வைக்கலாம்?
அந்த கும்பலின் கூட்டாளி இவன் - உன் போக்கு எனக்கு புரியவில்லை!
ஆனால் உங்களை நன்றாக புரிகிறது எனக்கு.. பலம் இருக்கிற அளவுக்கு புத்தி போதாது..
உன்னிடம் இல்லாத பலமா...
ஆனால் என்னிடம் புத்திசாலித் தனமும் இருக்கிறது!
இப்போதே வாஷிங்டனுக்கு போன் பண்ணி உங்களை திருப்பி அனுப்ப போகிறேன்.. பதிலுக்கு டெளபட் வந்து சேருவான்.
!


ஹே...!
அவசரப் படாதே..! என்ன நீ விலக்கி ஒதுக்க முடியாது!
முடியும்! செய்யத்தான் போகிறேன்!
ம்ம்... டௌபட்? உடோவிடன் ஹோட்டலுக்கு உடனே புறப்பட்டு வா!
அடுத்து -
ஜெனிவர்..! நான் நிர்வாகி - உளவாளி அல்ல!
நான் சொல் வதை செய்.. போதும்!
ஜெனிவர்
காரிகன்! நீங்கள் போகலாம்!
டௌபட் வா - சாப்பிடச் செல்வோம்.
அடங்காப் பிடாரி...! என் உதவி விரை விலேயே இவளுக்கு தேவைப்படும்!
ஆமாம் மிஸ்.. யுத்தத்தின் போது நான் இங்கே இருந்தேன்.
அப்போது காணாமல் போன என் சித்தப்பாவை பற்றி விபரம் சேகரிக்க வந்திருக்கிறேன்.


..விமானம் தாக்கப் பட்டதை அடுத்து அவர் மாயமாக மறைந்து விட்டார்.. உனக்கு அதுபற்றி...
மேடம்... உங்க சித்தப்பா ஏரிக்குள் விழுந்திருந்தால் ராட்சஸ ஜந்துக்கள் அவரை கபளீகரம் பண்ணியிருக்கக் கூடும்.
ராட்சஸ ஜந்துக்களா?
ஆமாம்.. மேடம்!
எழுந்திரு டௌபட்... கட்டுக் கதைகள் நமக்கு பிரயோஜனப் படாது!
காரின்கன் அங்கு வந்தார்.
கதையே பிடிக்காதாம் ஸார்.. ராட்சஸ ஜந்துக் களைப் பற்றி நான் கதை விடுகிறேனும்!
ஓகோ.. யுத்தக் கதைகள் வேண்டும் என்றா ளாக்கும்!
சொல் - நான் கேட்கிறேன்!
ஓ... பெரீய்ய்ய பிராணி - மனிதன் மாதிரி... உருண்டையான விழி கள்... வாய் ரொம்பப் பெரிசு... விரலிடை தோலுள்ள கைகள்.. கால்கள்.
ம்ம்.. இப்படி இருக்குமா?
ஆமாம்..! ஆமாம்! இதே மாதிரிதான்!



ஆழ்கடலில் நீந்துவதற்கான இரப்பர் உடுப்பு அணிந்த மனிதனைப் பார்த்து பிசாசு என்று நினைத்திருக்கிறான்!
அனுபவம் போதாது- அவர்களுக்கு!
அவள் நம்பவில்லை யாக்கும்?
அந்த அம்மா நம்ப மாட்டேன் னுட்டாங்க..
வயசும் அழகும் இருந்து என்ன பிரயோசனம்? மூளை இல்லையே!
அங்கே -
ஏதோ.. தவறு...
டௌபட்... ரஸ் வரைந்த மேப் உன்னிடம் இருக்கிறதா?
டாக்டர் டாட் கோட்டை விட்டிருக்கிறார் பார்... இந்த பாலத்தை அவர் படத்தில் காட்ட வில்லை!
ஜெனிவர்... நான் ஹும் - என்னைவிட.. காரிகன்..
அந்த திமிர் பிடித்த ஆளைப் பற்றி பேச் செடுக்காதே-
இம்மாதிரி வேலைகளில் என்னைவிட காரிகன் திறமை சாலி..!
நீ கற்றுக் கொள்வாய்!
ஏரியில் தவளை மனிதனா... ஆச்சரியம் தான்!
ஜெனிவர் ஒப்புக் கொள்ள மாட்டாள்...


...ஆனால் டௌபட் நம்புவான்!
.... ச்சூ...!
... அப்புறமாக வருகிறேன்!
ஆமாம்... ஏரியில் தவளை மனிதர்கள் உண்டாம்.... பழைய கதையானாலும் ஜாக்கிரதை!
அது சரி, டாக்டர் டாட்டின் வரை படத்தை என்னிடம் காட்டினால் மகாராணி கோபித்துக் கொள்வாளா?
இந்தா... ஆனால் இதில் நிறைய பிழைகள் உள்ளன!
இருக்காதே!
பாலத்தை குறிப் பிடவேயில்லை - இது ஒன்று போதாதா?
முக்கியமான இலக்காயிற்றே. எப்படி விட்டுப் போயிற்று ?
இதென்ன... எண்கள்?
தெரியவில்லை....! ரஸ்ஸுக்கு லாட்டரியில் ஆர்வம் உண்டா..? அல்லது ஸ்விஸ் பாங்க் அக்கவுண்ட் உள்ளதா?
ஹ்ம்ம்ம் டாட் சம்பந்தப் பட்ட, எண் களாக இருக் கலாம், விபரம் கேட்டறிய ஆள் இல்லையே!



டெளபட் அங்கே என்ன பண்ணிக் கொண்டிருக் கிறாய்! உள்ளே வா- நாளைக்கு செய்ய வேண்டியதை திட்ட மிடுவோம்!
இதோ வந்து விட்டேன்...!
மீண்டும் காரிகன் ஹோட்டல்காரக் கிழவனைத் தேடிச் சென்றார்.
உனக்கு என்ன தடயம் கிடைத் திருக்கிறது என்று கண்டு அறியப் போகிறேன்.. ஜெனிவர்
பாலம் இல்லையா...?
அப்படியானுல் உங்கள் 'மேப்' பூகம்பத்துக்கு முன் வரையப்பட்டிருக்க வேண்டும் ஸார்!
பூகம்பத்திற்கு முன் சாலை ஏரிக்கு மேலே சுற்றி வளைந்து சென்றது...
பூகம்பத்தின்போது மலை பிளந்தது... சாலை நாசமானது... புது சாலை உருவானது- பாலத் தோடு!
மிக்க நன்றி!
நீச்சல் உபகரணங்கள் கைவசம் இல்லாதது ஒரு குறைதான்...! இப் போதைக்கு மேலோட்டமாக நோட்டம் விட்டுத் திரும்பலாம்!


அவரை ஒரு கும்பல் கவனித்துக் கொண்டு இருந்தது..
லெப்டினெண்ட் ப்ராண்டும் டாக்டர் டாட்டும் பயன்படுத்திய சாலை பூகம்பத்திற்கு முன் இவ்வழியாகத்தான் சென்று இருக்கிறது.
எதையோ தேடுகிறான்..
டாட்டின் பாசறையை தேடிக் கண்டு பிடித்து விட்டான் என்றால் நமக்கு வேலை மிச்சம்!
அர்த்தமற்ற முயற்சியோ..?
நீச்சல் உபகரணங்கள் இல்லாமல் அதிக நேரம் உள்ளே தாக்குப்பிடிக்க முடியவில்லை..
முயற்சி பலிக்கவில்லை போல் இருக்கிறது
இருட்டி வருகிறது... இன்னும் ஒரே ஒரு தடவை-
பிடிவாதக்காரன் போல் இருக்கிறது.. தண்ணீருக்கு அடியில் இந்த இருட்டில் என்ன தெரியும்?


வெளிச்சம் அவ்வளவு மோசமில்லை...
என்ன... இது? ஹூய்ய்...!
அம்மாடி! .. மயிரை குத்திட்டு நிற்கச் செய்யும் எத்தனையோ அனுபவங்களை சந்தித்திருக்கிறேன்...
ஆனாலும் இதற்கு ஈடாகாது... ஏதுவும்!
அதோ... அவன்!
விடாதீர்கள்... அவனை!
இதற்கிடையே-
டாட்டின் 'மேப்' பிரயோஜனப் படாததால் முதியவர்களை சந்தித்து விபரம் சேகரித்தால்தான் எதையாவது சாதிக்க முடியும்!
எனக்கு இது எல்லாம் ஒத்து வராது... சொன்னால் கேள்! நீ ஏன் ..
காரிகனைப் பற்றி மறுபடியும் பிரஸ்தாபித்தாயோ தெரியும் சேதி!
சரி... விடு! என்னால் முடிந்த ஒத்தாசையை செய்கிறேன்!
கவலைப் படாதே... போய் தூங்கி ஓய்வெடுத்துக் கொள்!


கையில் அகப் பட்டது என்ன வென்று இப்போது ஆராயலாம்!
ஏரியில் -
எதையோ அவன் கண்டு பிடித்திருக் கிறான்
வாருங்கள் போய் பார்ப்போம்!
ஆகா....! கீழே கிடந்த எலும்புக் கூட்டிலிருந்து பிய்த்துக் கொண்டு வந்தது இது!
கண்டிப்பாக ஜெனிவர் இதை அலட்சியப்படுத்த முடியாது!
ஹா!
எதிரிகளால் தாக்கப்பட்ட காரிகன் நீரினுள் மூழ்கினார்
பளீர்!
நன்றாக கீறி விட்டேன் - கத்தியால்! உயிர் போயிருக்கும்
மேலே வரக் காணோமே!
நீச்சல் உப கரணங்களை சேகரிக்க வேண்டும்


பாறையின் மறைவில் வெளியே தலை நீட்டினர் காரிகன்
அந்தக் கொரில்லா கத்தியால் கீறி விட்டான்... ஜெனிவர் இதற்கப்புறமும் அசட் டையாக இருந்தால் - தொலைந்தாள்!
பின்னர்..
இன்னுமா ஊர் போய் சேர வில்லை?
காரிகன்!
முட்டாள்தனமாக உளறாதே ஜெனிவர்!
உன் சித்தப் பாவின் எலும்புக் கூட்டை பார்த்தேன்...
ஏரிக்குள் நான் கண்டு எடுத்தது இது - ஜெனிவர்.. கயவர்கள் பறித்துக்கொண்டு போக முயன்றார்கள். உன் சித்தப்பா மோசம் பண்ணவில்லை.
அவரை எனக்குத் தெரியாது... ஆனால் அவரைப் பற்றி பெரிய வர்கள் பெருமையோடு பேசுவார்கள்...
நாம் வேகமாக செயல்பட வேண்டிய தருணம் இது ஜெனிவர்
அந்த ஏரியினுள் புதைந்து கிடக்கும் இரகசியத்திற்காக கயவர் கும்பல் கொலை செய்யவும் தயங்க மாட்டார்கள்.



நாம் முந்திக் கொண்டு விட வேண்டும்... நாளை நீச்சல் உபகரணங் களோடு நாம்...
நாமா...? நீங்கள் எப்படி..! கையில் காயத் தோடு-?
லேசான சிருய்ப் புத்தான்...
டௌபட் கட்டுப் போட்டுவிடு வான்... இரவு ஓய்வெடுத்தால் சரியாகி விடும்.
ஜெனிவர் இனி உன்னை எதிர்பார்க்க மாட் டாள்... நீ உன் ஆபீஸ் காரியங்களை கவனிக்க செல்லலாம் டௌபட்..
கோபித்துக் கொள்ள மாட்டாளோ..?
எனக்கு சரிப் பட்டு வராது என்று ஆரம் பத்திலேயே சொன்னேன்
வெளியே காட்டிக் கொண்டதைவிட அதிக மாக களைப்புற்றிருந்த காரிகன் அயர்ந்து தூங்கினார்
எதிரணி தூங்க் வில்லை...
யெஸ்.... அமெரிக்கா! நாளை நீச்சல் உபகரணங் களை சேகரிக் கிறோம்.
ஆமாம்... காரிகன் செத் தொழிந்தான், அந்தப் பெண் தன் சகாவோடு குறுக்கிட்டால் தீர்த்துக் கட்டி விடுகிறோம்.



ஏஜென்ஸிக்கு போன் செய்தேன்... நீச்சல் உபகரணங்கள் வரு கின்றன... நாம் ஏரிக்குச் சென்று-
நாமா...? காரிகன் வேறு விதமாக...
அந்தக் கோமாளி இல்லாமல் நாமாக சாதிக்க முடியாதா என்ன?
எதரிகளின் தலைமையகத்தில்
ஸார்.... பெர்ரட் போன் செய்தான்... காரிகன் இடத்தை கண்டு பிடித்து விட்டானாம்... பணம் நாளை நம் கைக்கு வந்து விடும்..
பணமா?... ஓகே... சீஸர்...! நமக்கு பணம் தேவைதான், ஆனால் டாட்டின் பாசறையில் இருந்து பணம் தவிர வேறு நிறைய எதிர்பார்க்கிறேன்.
விடி காலையில்-
உபகரணங்கள் வந்தாயிற்று.. புறப் படுவோமா டெளபட்
வந்து... நான்... - சரி!
அருகாமையில்
ஐயாவின் ஏற்பாடு எப்படி?
ஒருவேளை காரிகன் இன்னமும் உயி ரோடிருந்தால்.
விங்
காயமடைந்து, களைப்புற் றிருந்த காரிகன் இன்னமும் கண் விழிக்க வில்லை.
காரிகன் குறிப் பிட்ட இலக்கு இதுதான்..
இந்தாருங்கள்...
!


அழுது தீர்த்து விடுங்கள்... மேடம்!
ஓ.கே.. சமாளித்துக் கொள்வேன்... நாம் அடுத்து, காணாமல் போன இரு மில்லியன் டாலர்களை மீட்க வேண்டும்.
மீண்டும் நீரினுள் இறங்கி னார்கள்...
பணப்பெட்டி சித்தப்பாவின் கையோடு சங்கிலியால் பிணைக்கப் பட்டிருக் கிறது....
காரிகன் இங்கே இருந்தால் நன்றாக இருக்கு மில்லையா?
அம்பெரியும் துப்பாக் கியை கையாள தெரிந்து கொண்டீர்கள் அல்லவா - புறப்படுங்கள்!
ஹே...! எதிரிகள் குழு!
நீச்சல் உபகர ணங்களோடு!
ஜெனிவர்...' எழுந்திரு!
டக் டக்
பிரச்சனை கைமிஞ்சிப் போய்க் கொண் டிருக்கிறது
டௌபட்
8
காரையும் காணோம்!
எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டார்கள்!



நேரத்திற்கு போய்ச் சேர முடியமா?
பெர்ரட்.... அதோ - அமெரிக்கர்களின் கார்! அந்தப் பெண்ணும் காரி கனுமா... அல்லது அந்த வேற்று நபருமா?
யாராக இருந். தாலும் தீர்த்துக் கட்டி விடுவோம்!
ஏரியினடியில்
சங்கிலி உறுதியாக இருக் கிறது.. மேலே போய் வெட்டும் கருவியை காரிலிருந்து எடுத்து வந்தால்தான் காரியம் நடக்கும்!
குண்டர்கள்... கையில் ஆயுதங்களோடு, காத்துக் கொண்டிருக் கிறார்கள்..!
ஜெனிபரும், டெளபட்டும் வெளியே தலைநீட்டினால்... தொலைந்தார்கள்!
யாரங்கே...?
ஹலோ.... லேடி!
ஜெனிபர்... டெளபட்...
மூழ்குங்கள்...


குட்பை.. லேடி!
டௌபட்...! விலகு..!
சைத்தானே!
சதக்!
ஐ..யோ!
கொலைகாரப் பாவிகளா..!



அவர்களிடம் ஆயுதம் ஏது மில்லை! உள்ளே போய் சுலபமாக தீர்த்துக் கட்டி விடலாம்
முன்பு தான் பத்திரமாக ஒதுங்கிய மறைவிடத் திற்கு ஜெனிவரை இழுத்துக் கொண்டு போனார் காரிகன்..
விளைக்கை அணை... அவர்கள் வந்தால் தண்ணீருக்கு அடியில் போய்விடு... நகர்ந்து கொண்டேயிரு... ஜாக் கிரதை நான் திரும்பி வரும்வரை !
மேலெழும்பி யதும்-
எ..எங்கே?
எனக்கு ஒரு சுவாச வாயு கவசமும், ஈட்டி எறியும் துப்பாக்கியும் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன்
அவர்களிடம் ஆயுதம் ஏதுமில்லை... இரண்டு மில்லியன் டாலர்கள் நமக்காக காத்துக் கொண்டிருக்கின்றன... வாருங்கள்!


பேராசை கண்ணை மறைக்க எத்தர்கள் ஏரியினுள் பாய்ந்தார்கள்..
கும்!
அதாவது - ஒருவனைத் தவிர!
சுறுக்களைப் போல் வெறியோடு முன்னேறி னார்கள்..
உண்மை கசந் தாலும்... காரிகன்.. உங்கள் உதவி எனக்குத் தேவை!
பிரச்னையின் கடுமை ஜெனிவருக்கு புரிந்து விட்டது
இனி தாம் தூம் என்று ஆர்ப்பாட்டம் பண்ண மாட்டாள்..
பெர்ரட் தன் சகாக்களை நாலாதிசை களிலும் அனுப்பினான்



என்னை சூழ்ந்து கொண்டு விட் டார்களே..!
கோழையாக நான் சாக விரும்ப வில்லை... போராடு வேன்... எதிர்த்து தாக்குவேன்
ஹே...! அந்தப் பெண்! அவளை நான் கொன்றால் பெர்ரட் எனக்கு 'போனஸ்' வழங்கக் கூடும்!
மாட்டிக் கொண்டு விட்டேன்..- எக்கச் சக்கமாக!
காரிகன்...! ஓ... கடவுளே... நன்றி!
அவனுடைய அம்புத் துப் பாக்கி கிடைத்து விட்டது.. இனிமேல்- அதிரடிதான்
என் தோழர்கள் அவர்களோடு மோதட்டும்..


என் இலட்சியம் வேறொன்றின் மீது!
இரண்டு மில்லியன் டாலர்கள்... ஹா...ஹா...!
பணம் இருந்த பெட்டியை அதன் பாது காவலரிடமிருந்து முரட்டுத்தனமாக பிடுங்க முயன்றான் பெர்ரட்
அவனுடைய விளக்கு ஜெனிவரின் கவனத்தை ஈர்த்தது..
பணத்தோடு ஓடுகிறான்...
விடக்கூடாது...
காரிகன் மற்றவர்களை தானாகவே சமாளித்துக் கொள்ளட்டும்!
ஜெனிவர் ஒரு வனை துரத்திச் செல்கிறாள்..


ஹூய்ய்... மயிரிழையில் தப்பினேன்..
அகப்பட்டுக் கொண்டாய்... இனி நீ தப்பவே முடியாது
ராட்சஸப் பிடி..
மாட்டிக் கொண்டு விட்டேன்..! ஜெனிவர் அப்பால் விலகிப் போய் விட்டாளோ?
ஐயோ... காரிகனை கொல்ல முயற்சி நடக்கிறது
இங்கிருந்து சுட முடியாது- தூரம் அதிகம்... ஆனாலும் அவனுடைய குறி தப்புமாறு செய்ய இயலும்
ஜெனிவர்... ஐ....லவ்...யூ!
ஜெனிவரின் குறுக்கீடு காரிகனை காப்பாற்றி விட்டது- எனினும்...
அவளுடைய துப்பாக்கி காலியாகி விட்டது... அவளை சுலபமாக மடக்கி விடலாம்!


ஒருவன்தான் பாக்கி... அவனும் விலகி ஓடுகிறான்..
துப்பாக்கியை நிறைத் துக் கொள்ள எனக்கு காரிகன் அவகாசம் ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்.. பெர்ரட் எங்கே தொலைந்தான்!
அதோ போகிறான் அவனை நான்...
காரிகன்... என்ன இது? ... பெர்ரட் தப்பியோட வகை செய்து விட்டீர்களே!
அவனை விரட்டிச் சென்ற என்னை ஏன் தடுத்து நிறுத்தினீர்கள்... பதில் சொல்லுங்கள்!



மேலே வா... சொல்கிறேன்!
சொல்ல என்ன இருக்கிறது!
பணத்தோடு தப்பியோடி விட்டான்... நீங்கள்தான் காரணம்... உங்களை-
ரொம்பவும் துள்ளாதே
நான் சொல் வதை கொஞ்சம் கேள்!
பணத்தைவிட அரிய தோர் உண்மையை நான் கண்டு பிடித்திருக் கிறேன் என்பது ஒரு காரணம்
டாட்டின் பாசறை இருக்கு மிடம் தெரிந்து விட்டது
நிஜமாகவா...? என்ன இருக் கிறது அங்கே?
தெரியாது... போய்த்தான் பார்க்க வேண்டும்- வா!



இருவரும் நீருக்குள் சென்றார்கள்...
காரிகன் சுட்டிக் காட்டினார்.
ஆமாம்... ஏதோ செயற்கை குகைப் பாதை போல் தெரி கிறது..
சாய்வாக மேல் நோக்கிச் சென்றது அந்தக் குகை..
அதன் முடிவில்...
இரகசிய குகை... பிரமிப் பூட்டுகிறது!
அங்கே கவனி... பிராண்ட்!
வாவ்...! அடேயப்பா.. எவ்வளவு பெரிய கதவு!
டாட்டின் பாசறை..! நீங்கள் சொன்னது சரிதான்!
டாட்டின் பாசறை
உள்ளே உழைய வழி கண்டு பிடிக்க வேண்டும்!
என்னிருக்கும்- உள்ளே!
முதலில் உள்ளே நுழைவது எப்படியாம்?


ஏதாவது சூட்சும அமைப்பு இருக்கக்கூடும்
சுவிட்ச் அல்லது பட்டன் எங்கே யாவது மறை விடத்தில் இருக் கலாம்...
ஹோய்ய்...! இதோ - மாடம் போன்ற பொந் தில் ஒரு விசை இருக்கிறது!
இதை இழுத்தால்...
அதை தொடாதே... ஜெனிவர்!
காரணம்?
கொஞ்சம் பொறு!
இப்படி முயன்று பார்ப்போம்..!
சரியான சந் தேகப் பிராணி நீங்கள்
இப்போது தெரிந்து விடும்!
டமால்!


நான் ஒரு அவசரக் குடுக்கை என்பதை மறுபடியும் நிரூபித்து விட்டேன்... நீங்கள் மட்டும் எச்சரித்திரா விடில்-
உளவு தொழி லில் தொடர்ந்து உயிர்வாழ அதிர்ஷ்டம் ரொம்ப அவசியம்...
வேறோர் இடத்தில்-
பணத்தை கைப் பற்றி விட் டாயா? சபாஷ் பெர்ரட்!
அதை நீ சேகரித்த இடத் தில், பெரும் புதையலே இருக்கலாம்.... அதை யும் நம்முடையதாக்கிக் கொள்ள வேண்டும்- யாருக்கும் தெரியாமல்!
உள்ளே நுழைவதற்கான வழிமுறை டாட்டின் டயரியில் குறிப்பிட்டிருக் கலாம்...
சேகரிக்க முடிந்த தகவல்கள் அனைத்தையும் ரஸ் நமக்கு அனுப்பி விட்டாரே!
மேப் மட்டும் தான் உப யோகமாக இருந்தது....
வெடி வைத்து தகர்ப்போமா?
குகை சரிந்து நாம் புதை யுண்டு போகும் அபாயம் உண்டு...
டாட்டை கொலை செய் தது யார்... எதற்காக என்று நாம் கண்டுபிடிக்க வேறு வழி எது?
பின்னர் ஜெனிவரின் அறையில்-
டாட்டின் டயரியில் மிஞ்சிய காகிதங்கள்- ரஸ் மூட்டை கட்டி அனுப்பியது!
மறுபடியும் துருவிப் பார்த்து விட வேண்டியது தான்!


அலுப்பூட்டும் சங்கதி... ஹூம்!
இத்தோடு மூளையை கொஞ்சம் கசக்கினால் புதிருக்கு விடை கண்டு பிடித்து விடலாம்...
மணி மூன்று.. இதற்கு மேல் தாங்காது- நான் தூங்கப் போகிறேன்!
அருகாமையில்
யெஸ் ஸார், நாளை பாசறைக்கு அந்த ஜோடியை பின் தொடர்ந்து செல்லப் போகிறோம்- அவர் களுக்கு அங்கேயேதான் சமாதி!
காலையில் காரிகனும், ஜெனிவரும் மீண்டும் ஏரிக்கு சென்றார்கள்..
அந்த சூட்சும வெடி சமாச்சாரத்திற்குப் பின் எனக்கு ஒரே கலக்கமாக இருக்கிறது
எனக்கும்தான்! விழிப்போடி ருக்க வேண்டும் என்பது பாடம்!
நேற்ற சிலரை நாம் இழந்து விட்டோம்.. இன்றைக்கு பழி தீர்த்து விடுவோம்!
எவ்வளவு தேடியும் கதவை திறக்கும் வழி தெரிய வில்லையே
சோர்வடை யாதே!
அங்கே என்ன இருக்கிறது?
இந்த பெயர் பலகை இங்கே எதற்காக இருக் கிறது?
கழற்றிப் பார்ப்போம்!


இதுவும் வெடித்து வைக்கலாம்... நீ அப்பால் போய்விடு!
இல்லை... நானும் இங்கேயே இருக்கிறேன்!
ஹே.... இதோ.... பெயர்த்து விட்டேன்!
டாட்டிமன் பாசறை
வெடித்துத் தொலைந்து விடக்கூடாது!
ஹாய்ய்... இங்கே பாரேன்!
ஆனாலும் நீங்கள் ரொம்ப சமர்த்துதான் காரிகன்
ஆனால் அதை திறக்க தேவையான 'காம்பினேஷன்'?
அதற்கு அவசியமே இல்லாமல் போகலாம்
பெர்ரட் கும்பல் பாதாள குகையின் நுழைவு வாசலை கண்டு பிடித்து விட்டனர்.



சே... எனக்கு பைத்தியமே பிடித்துவிடும் போலிருக் கிறது. அடுக்கடுக்காக எத்தனை தடைகள்!
சத்!
போய் மறு படியும் டாட்டின் டயரியை கிளற வேண்டியது தான்
அதற்கு ஏது நேரம்?
குகையின் மறு முனையில் ஆபத்து வந்து கொண்டிருக் கிறது...
ஒவ்வொரு துண்டு காகிதத்திலும் உள்ள ஒவ்வொரு எழுத்தும் எனக்கு மனப்பாடம்.. அதில் எண்கள் எதுவும் இல்லவே இல்லை!
நீ சொல்வது நிஜ மானால் நம் முயற்சியை கைவிட வேண்டியது தான்... வெடி வைத்து தகர்த்தால் குகை தாங்காது
எதிரிகள் நெருக் கத்தில் வந்து விட்டனர்..



ரகசிய நம்பர் குறிப்பு இல்லாமல் டாட்டின் பாசறையைத் திறக்க வழியே கிடையாது. டாட்டின் டயரியில் ஏதோ சில நம்பர்கள் பார்த்த மாதிரி நினைப்பு எனக்கு!
இருந்தது- மேப்பில்! அவை மேப்பை பகுதிகளாக பிரித்துக் காட்டும் எண்கள்!
ஆனால் அவை வரிசைக் கிரமமாக இருக்க வில்லையே... வலது ஓரத்திலும், இடது ஓரத்திலும் இருந்தன... ஆனால் எண்கள் நினைவுக்கு வரவில்லை..
எனக்கு நினைவில் இருக்கிறது..! இதோ-
பெர்ரட் ஓசைப் படாமல் வெளி யேறி வந்தான்..
உன் நினைவாற்றல் அபாரம்...! உன்னை கட்டிக் கொள்ளத் தோன்றுகிறது எனக்கு!
தொட்டீர்களோ - தெரியும் சேதி!
அந்த எண்கள் தானா என்று இப்போது தெரிந்து விடும்!



நரம்பை பிறாண்டும் ரீங் கார ஓசை...
...அதையடுத்து அந்த பிரம் மாண்டமான கதவு திறந்து கொண்டது...
சாதித்து விட்டோம்...! காரிகன்... நாம் சாதித்து விட்டோம்!
கிஸ்!
ச் சொ... என்ன காரியம் பண் ணிவிட்டேன்!
உள்ளே-
இவை எல்லாம் என்ன.. காரிகன்?
மின்சார விளக்கு! இங்கே எப்படி-?
ஏரி நீரோட்டத்தினால் ஜெனரேட்டர் இயங்கக் கூடும்... கதவில் சுவிட்ச் இருந்தது..
அதென்ன மேலே ?
பதப்படுத்தப் பட்ட உடல்கள்! ஓ... புதிர் அவிழ்ந்த மாதிரிதான்!


உள்ளே போய் அவர் களை வளையுங்கள்... நான் சமிக்ஞை செய்ததும் பாய்ந்துவிட வேண்டும்!
புதிர் அவிழ்ந்தது என்றீர்களே..! என்ன புதிர்- சொல்லுங்கள் காரிகன்!
'க்ரையோஜன்' கேள்விப்பட்டு இருக்கிறாயா?
இல்லையே..! அதற்கு என்ன அர்த்தம்?
உடலை மிகக் குறைந்த தட்ப நிலையில் வைத்து பரா மரித்து பின்னர் தேவைப்படும் போது மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்ளும் யுக்தி!
யாருடைய உடல்கள் இவை?
சர்வதேச முக்கி யத்துவம் பெற்ற வர்களின் உடல் களாக இருக் கலாம்!
ஆயுளை நீடிக்கும் யுக்தி இது!
இம் மூவரின் புகைப் படங்களையும், இரண்டாம் உலக மகா யுத்தம் சம்பந்தப்பட்ட பைலில் பார்த்திருக் கிறேன். அன்று போலவே இன்றும் அப்படியே இருக் கின்றன- கொஞ்சம்கூட மாறுமல்!
ஆனால் இந்த நபர்களெல்லாம் இறந்து விட்டதாக சரித்திரம் சொல்கிறதே! இவர்களது சடலங்கள் கூட யுத்த முடிவில் கண்டு பிடிக்கப்பட்டதே! அது எப்படி?
யுத்த தந்திரம் அது! இவர்களைப் போலவே தோற்றம் கொண்ட அப்பாவிகள் பலி கொடுக்கப்பட்டனர்! கண்டுபிடிக்கப்பட்டது அந்த துரதிர்ஷ்டசாலி களின் சடலங்கள்!



இந்த யுக்தி யினால் என்ன ஆதாயம்... காரிகன்!
காலம் மாறி சாதகமான நிலை வரும் வரை பொறுத்திருந்து மீண்டும் ஒரு முயற்சி-ஓ....
என்ன... - ஓ?
விருந்தாளிகள்! தொடர்ந்து. பேசிக்கொண் டேயிரு!
படக்!
கொல்லுங் கள்...!
இழு.... இதை!
மின்னலடித்தாற்போல் பளீரிட்டது அங்கே..! அதைத் தொடர்ந்து... எங்கும் கும்மிருட்டு!
மின் சப்ளையை துண்டித்து விட்டார்கள்
தலை விளக்கை பயன்படுத்தி தேடிப் பிடி யுங்கள்...
அவர்கள் மட்டும் அகப்ப டட்டும்...
தொலைத்து விடுவோம்
உனக்குத்தான் அபார நினை வாற்றல் உண்டே..! கதவு எங்கே இருக் கிறது- சொல்லேன்!
கையை இப்படி கொடுங்கள்!


அங்கங்கே சில விளக்கு கள் பளீரிட்டன... அம்பு துப்பாக்கிகள் சீறின...
ஆவ்...
நம்ம ஆளையே குறி வச்சுட்டா யேடா... முண்டம்!
வெளியே வந்து விட்டோம்... காரிகன்
நீச்சல் உபகர ணங்களை தேடி எடுக்க வேண்டும்!
தாமதிக்கும் ஒவ் வொரு கணமும் ஆபத்து..
முதலில் விசையை தேடுவோம்..
பெர்ரட்டின் விளக்கு வெளிச்சம் அவர்கள் மீது பாய்ந்தது...
கதவருகே இருக்கிறார் கள்... வீழ்த்துங்கள்
காரிகன்.... ப்ளீஸ்
இதோ- அகப் பட்டுவிட்டது
மறுகணம் - படீரென்று சாத்திக் கொண்டு விட்டது அந்த பிரம் மாண்டமான கதவு.
இனி நாம் பதற வேண்டிய தில்லை!
அ..ம்..மாடி..! நான் பிழைத் ததே உங்களால் தான் காரிகன்!
நம் அடுத்த நடவடிக்கை என்ன... காரிகன்?
போலீஸுக்கு தகவல் கொடுப் போம்- முழு விபரங் களோடு!


பதப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளே கிடக்கும் அந்த மூன்று சடலங்களின் கதி?
நம் எதிரிகளும் அங்கேயே செத்தொழிய வேண்டியது தானா?
மின் சப்ளையை நான் துண்டித்ததுமே அந்த பைத்தியக்காரத்தனத் திற்கு முற்றுப் புள்ளி விழுந்திருக்கும்!
அவர்களுக்கு அதிர்ஷ்ட மிருந்தால் போலீஸார், அங்கே போய் மீட்கும் வரை உயிர் போகாது இருக்கும்
சித்தப்பாவின் மீது சுமத்தப்பட்ட பழியை துடைத்து விட்டதோடு, டாட்டின் இரகசியத் தையும் கண்டு பிடித்து விட்டோம்... ஆனால், அந்த இரண்டு மில்லியன் டாலர்களை கோட்டை விட்டு விட்டோமே..!
உண்மை தெரியாததால் அப்படி மனம் நொந்து பேசுகிறாய்!
உண்மையா...? என்ன உண்மை?
அந்த நோட்டுகள் அத்த னையும் யுத்த காலத்தில் அரசாங்கமே அச்சிட்ட போலிகள்! அவற்றின் நம்பர்கள் அத்தனையும் பதிவு செய்யப் பட்டுள்ளது!
அந்த பணத்தை வெளியே விடுகிறவன் நேரே கம்பி எண்ணப் போக வேண்டியதுதான்!
வாவ்...! இப்போதும் கூட ஏனோ உங்களை நேசிக்கத் தோன்ற வில்லை எனக்கு... ஆனால் அதேசமயம் வெறுப்பும் இல்லை... காரிகன்!
இங்கேயும் அதே கதை தான் ஜெனிவர்
முற்றும்.

## ஸ்ரீலங்கா வாசகர்கள் கவனத்திற்கு :

எங்களது வெளியீடுகள் அனைத்துமே கீழ்கண்ட முகவரி யில் எங்களது விற்பனையாளர்களிடம் கிடைக்கும்.

**L. முத்தையா & சன்ஸ்,**
**நியூஸ் ஏஜண்ட் & புக் செல்லர்ஸ்**
155, பிரின்ஸ் தெரு, 2வது மாடி
கொழும்பு - 11, இலங்கை
போன் : 549095

---

## சந்தா பற்றி...!

தற்சமயம் நேரடிச் சந்தா இல்லை. ஜனவரி '94 முதல் ஆரம்பிக்கும்! அதுவரை வாசகர்கள் மன்னிக்க வேண்டுகிறோம்!

---

**கைவசம் உள்ள முந்தைய வெளியீடுகள்!**

### லயன் காமிக்ஸ்

1) கழுகு வேட்டை - ரூ. 10/-
2) ஆர்ச்சி inபாரீஸ் - ரூ. 4/-
3) பாலைவன சொர்க்கம் - ரூ. 3/-
4) இரத்த வெறியர்கள் - ரூ. 6/-

### மினி லயன்

5) இரும்புக் கெள-பாய் - ரூ. 4/-
6) வின்டர் ஸ்பெஷல் - ரூ. 3/-
7) அதிரடிப் பொடியன் - ரூ. 5/-





## வாசக ஓவியர்களே!

அடுத்த இதழ் முதல் நமது லயன் காமிக்ஸில் சிறியதொரு பகுதி உங்களுக்காக ஒதுக்கப்படும்! உங்கள் கைவண்ணத்தில் நமது காமிக்ஸ் ஹீரோக்கள் / வில்லன்களை வரைந்து அனுப்புங்கள்! பிரசுரமாகும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ. 15/- பரிசு!

## மீண்டும் புக் மார்கெட்!

அடுத்த மாதத்திலிருந்து புக் மார்கெட் பகுதி மறுபிரவேசம் செய்யப் போகிறது! உங்களிடம் விற்பனைக்கு உள்ள/ தேவையான காமிக்ஸ்களின் விபரத்தை எழுதி அனுப்புங்கள்! அதை நமது இதழில் வெளியிடுகிறோம்! பிற வாசகர்கள் உங்களோடு நேரில் தொடர்பு கொள்வார்கள்.

- ஆசிரியர் -

## வாசகர் கடிதம் பகுதி

அடுத்த இதழ் முதல்!




ரிப் கிர்பி
துப்பறியும்
மாயாஜால
மோசடி!
லயன்
காமிக்ஸ்
விரைவில்
வருகிறது!
ரூ.3-50


ரிப் கிர்பி & டெஸ்மாண்ட்
தோன்றும்
கானகக்
கோட்டை!
விரைவில்
வருகிறது!
லயன்
காமிக்ஸ்
விலை ரூ. 3·50

லயன் காமிக்ஸ்

# ஏஜெண்டுகள் தேவை...!

**கிழ்க்கண்ட ஊர்களில் நமது காமிக்ஸ்களை விற்பனை செய்திட ஆர்வமான ஏஜெண்டுகள் தேவை!**

1) 
2) குன்னத்தூர்
3) பண்ருட்டி
4) திண்டிவனம்
5) உளுந்தூர்பேட்டை
6) செஞ்சி
7) விருதுநகர்
8) ராஜபாளையம்
9) ஆத்தூர்
10) வாழப்பாடி
11) மோகனூர்
12) பொம்மிடி
13) கம்பம்
14) நத்தம்
15) அம்பாசமுத்திரம்
16) வேலூர் (சேலம்)
17) புளியங்குடி
18) திருச்செந்தூர்
19) சுரண்டை
20) ஆரணி
21) தண்டராம்பட்டு
22) ஆற்காடு
23) திருத்தணி
24) செங்கம்
25) திருவனந்தபுரம்
26) குன்னூர்
27) தேவர் ஷோலா
28) குடவாசல்
29) டால்மியாபுரம்
30) முசிறி
31) ஆண்டி மடம்
32) குளித்தலை
33) பம்பாய்
34) கும்பகோணம்
35) மாயவரம்
36) உடுமலை
37) சீர்காழி
38) திருத்துறைப்பூண்டி
39) நன்னிலம்


## பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,

த. பெ. எண் : 374, சிவகாசி - 626 123

போன் : 20649 & 21159